தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-7-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பருத்திக்கு நல்ல விலை கிடைக்கும்

உலகளவில், பருத்தி உற்பத்தி, அமெரிக்க வேளாண்துறை (USDA) கணக்கீட்டின்படி, 2014-15ல் 117.0 மில்லியன் பேல்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்தாண்டை (2013-14) விட ஒரு சதவீதம் அதிகமாகும். அமெரிக்க பருத்தி உற்பத்தி, 2014-15ல் 16.3 மில்லியன் பேல்கள் (1 பேல் = 225 கிலோ) இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நடப்பாண்டை (2013-14) காட்டிலும் 17 சதவீதம் அதிகமாகும். இந்த எதிர்பார்க்கப்படும் உற்பத்தி அதிகரிப்பு சீனா, பிரேசில் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளில் பருத்தி உற்பத்தி குறைவை ஈடுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக நாடுகளில் பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு, ஜவுளி தேவை, பருத்தியின் குறைந்த ஏற்ற இரக்க விலை நிலை மற்றும் சீனாவின் ஆதரவு விலை கொள்கை ஆகியவை பருத்தியின் நுகர்வு அதிகரிக்கும் காரணியாக எதிர்ப்பார்க்கப்படுகிறது. வரும் 2014-15ல் சீனா 8.0 இலட்சம் பேல்கள் மட்டுமே பருத்தி இறக்குமதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது, இது கடந்தாண்டு (2013-14ல்) இறக்குமதியான 13.5 இலட்சம் பேல்களைவிட 5.5 இலட்சம் பேல்கள் குறைவாகும்.

இந்தியாவின், பருத்தி ஆலோசனை வாரியத்தின்படி, நடப்பாண்டில் (2013-14ல்) பருத்தி சாகுபடி பரப்பு கடந்தாண்டை (2012-13) விட 3.4 சதவீதமாக குறைந்தும், உற்பத்தி 2.7 சதவீதம் அதிகரித்தும் உள்ளது. இதற்கு காரணம் பருத்தி உற்பத்தித்திறன், ஹெக்டருக்கு 518 கிலோவிலிருந்து 552 கிலோவாக அதிகரித்ததேயாகும். இந்திய அரசின் நான்காவது முன்கூட்டிய கணக்கீட்டின்படி, தேசிய அளவில், 2014-15ல் பருத்தி உற்பத்தி கடந்தாண்டை போலவே நிலையாகவும் (35 மில்லியன் பேல்கள் (1 பேல் = 170 கிலோ) மற்றும் ஏற்றுமதி கடந்தாண்டை விட 23 சதவீதம் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நிலையான உற்பத்தி மற்றும் பருத்தியின் நுகர்வு அதிகரித்ததேயாகும்.

தமிழ்நாட்டில், பருத்தி ஜனவரி – பிப்ரவரி மற்றும் ஆகஸ்டு ஆகிய மாதங்களில் பயிரிடப்படுகிறது. நடப்பாண்டில் பருத்தி சாகுபடி பரப்பு 1.17 இலட்சம் ஹெக்டர் எனவும் உற்பத்தி 5 இலட்சம் பேல்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்தாண்டைக் காட்டிலும் 8.5 சதவீதம் சாகுபடி பரப்பு மற்றும் 6 சதவீதம் உற்பத்தி குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில் நீண்ட இழை பருத்தி ரகத்தின் விலை குவிண்டாலுக்கு ரூ.4900 முதல் ரூ.5200 வரை விற்கப்படுகிறது.

இச்சூழலில் பருத்தி விவசாயிகள் பருத்தி விற்பனை மற்றும் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த பத்தாண்டுகளாக கொங்கணாபுரம் சந்தையில் நிலவிய பருத்தியின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாடு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

## விற்பனை முடிவுகள்

வர்த்தக மூலங்களின்படி, பருத்தி ஏற்றுமதி அதிகரிப்பினால் விலை உயர வாய்ப்பு இருக்கும் என எதிர்பார்த்து, தமிழக விவசாயிகள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் 0.25 இலட்சம் பேல்கள் பருத்தியைச் சேமித்து வைத்துள்ளனர். ஆய்வு முடிவுகள் மற்றும் வர்த்தக ஆய்வுகளின்படி, பருத்தி விலை வரும் மாதங்களான ஆகஸ்டு முதல் அக்டோபர் மாதங்களில், குவிண்டாலுக்கு ரூ.5400 முதல் ரூ.5600 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலையின் அடிப்படையில் விற்பனைச் செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

## விதைப்பு முடிவுகள்

வரும் ஆகஸ்டு மாதத்தில் விதைக்கும் பருத்தி, ஜனவரி – பிப்ரவரி, 2015ல் அறுவடை செய்யப்படும், இதன் விலை குவிண்டாலுக்கு ரூ.5250 முதல் ரூ.5450 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் இந்த விலையின் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறுப் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

## மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405.

## தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பருத்தி துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண்: 0422-2456297

மக்கள் தொடர்பு அலுவலர்